5th August 1966] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அந்த விவசாயினுடைய அனுமதி இல்லாமல் ஏன் சென்ருர்கள், அல்லது அந்த விவசாயினுடைய அனுமதி இல்லாமல் எப்படிச் சென்ருர்கள் என்று டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் அந்த அதிகாரிகள் பேரில் அரசாங்கம் எடுத்ததா ? இதைப் போல செய்யக் கூடாது என்று மாநிலத்திலுள்ள பிற அதிகாரிகளுக்கும் இந்த அரசாங்கம் இதற்குப் பிறகு ஏதேனும் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையயா : இந்த விஷயம் இப்பொழுது கோர்ட்டில் இருக்கிறது. முடிவு தெரிந்ததற்குப் பிறகு மற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

* 128 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீக்கழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் தேதி நடந்த வட வேலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில், நவரை கார் கொள்முதல் செய்வதை அரசாங்கம் நிறுத்திவிடும்படி, அரக்கோணம் தொகுதி சட்டசபை உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டனவா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

* 129 *Q.*—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any petition has recently been received by the Government against the Tahsildar, Supply Officer and other Government servants in procuring paddy by compulsion from the small landholders in Polur taluk, North Arcot district; and

(*b*) if so, the action taken thereon.

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. கி. இரா. சம்பந்தம் : வடார்க்காடு ஜில்லாவில் எந்த முறையான லெவி அமைக்கப்பட்டிருக்கிறது ? அந்த லெவி அமைக்கப்பட்ட முறையைப்பற்றி நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

கனம் சபாநாயகர் : இப்பொழுது தான் அமைச்சர் அவர்கள் சொன்னுர்களே, இவ்வளவு நேரம் படித்தார்களே, ஸ்டேட் பூராவுக்கும் என்னவென்று.

(பதில் இல்லை.)

Tuticorin Harbour Project

* 130 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any modification has been proposed to the detailed Project Report on the Tuticorin Harbour Project prepared by the Chief Engineer and Administrator of the said Project; and

(*b*) if so, the details thereof?

[5th August 1966

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : (அ) & (இ) தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தின் தலைமைப் பொறியாளர்—நிர்வாகி தூத்துக்குடி துறைமுகத் திட்டத்திற்காகத் தயாரித்த திட்ட விவர அறிக்கையில் தொழில் நுட்ப ஆலோசனைக் குழு செய்யக் கருதியுள்ள முக்கிய மாறுதல்கள் பின்வருவனவற்றிற்குச் சம்பந்தமுடையவையென்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

(1) ஆழ்கடலில் மீன் பிடிக்கும் கப்பல்களை நிறுத்துவதற்கு இப் பெரிய துறைமுகத்தில் வசதிகள் செய்து தருதல் ;

(2) ஐந்து கப்பல் துறைகளில் இரண்டின் வடிவமைப்பை பெரிய மரக்கலங்கள் வருவதற்கேற்பவும் அவை 35 அடி நீரில் அமிழ்ந்திருக்கும் வகையில் பின்னர் இவற்றை ஆழப்படுத்தும் வகையிலும் அமைத்தல்.

திரு. வை. சங்கரன் : இந்த மாறுதலோடு இந்தத் தூத்துக்குடி துறைமுக பிராஜக்ட் எவ்வளவு காலத்திற்குள் முடிக்கப்படும் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : இந்த மாறுதல் யோசனையையும் வைத்து, மொத்த வேலைகளோடு சேர்த்து இதையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த விரிவான திட்டத்தோடு சேர்ந்து, தூத்துக்குடியின் அருகாமையிலுள்ள புன்னைகாயல் போன்ற சிறிய துறைமுகங்களையும் சீர்படுத்தி, அதில் சிறிய கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சுவதற்குரிய வகையில் சீர்படுத்துவதற்கான திட்டம் இதோடு சேர்க்கப்பட்டிருக்கிறதா, இல்லையென்றால் இதையும் சேர்ப்பதற்கு இந்த அரசு சிபாரிசு செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : இது சென்ட்ரல் கவர்ன்மென்ட்டைப் பொறுத்ததல்ல. சென்னை சர்க்கார் செய்ய வேண்டிய வேலைகள், அதாவது மைனர் போர்ட்ஸ் என்பதின் கீழ் வரும். இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் இதைப் பற்றிய எல்லா விவரங்களையும் கொடுக்கலாம்.

காதி இலாகா உற்பத்தி செய்த நூல்

*131 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ல் காதி இலாகாவால் உற்பத்தி செய்யப்பட்ட நூல் நம்பர் வாரியாக எத்தனை கெஜம் ?

(இ) அதற்காக உபயோகிக்கப்பட்ட பஞ்சு ரோல்கள் ரகவாரியாக எத்தனை பேல்கள் ?

கனம் திரு ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் :

	மெட்ரிக் சிட்டங்கள். லட்சம்
(அ) (1) முரட்டு ரகம் :	
ஆங்கில நெம்பர் 12-லிருந்து 18 வரை (அதாவது) மெட்ரிக் நெம்பர் 20-லிருந்து 30 வரை.	55·00